20th September 1958]

SRI V. K. KOTHANDARAMAN : இந்த வேலை நீண்ட நாட்களாகவே நடைமுறைக்கு கொண்டுவராமல் இருப்பதால், இதை உடனடியாக நிறைவேற்றுவதற்காக இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை ஞாபகப்படுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போதுதான் சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் எவ்வளவு அக்கறையிருக்கிறதோ அதைவிட அரசாங்கத்திற்கு அதிக அக்கறை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Police firing at Valparai

* 379 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether any compensation has been paid to the families of workers at Valparai who were shot on the Independence Day, 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question does not arise because no one was shot at Valparai on Independence Day, 1957. I may, however, add that the Government have paid a sum of Rs. 2,500 to the widow of Sri Gnanamuthu who has killed when the police had to open fire on a riotous mob at Valparai on Republic Day of that year, viz., on 26th January 1957.

SRI N. K. PALANISAMI : ஸார், இதில் பாக்கி இருக்கக்கூடியவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் என்ன ஆலோசனை செய்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது விஷயமாக இதை விசாரித்த கமிஷனும் யாருக்கு எல்லாம் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய்திருந்தது. அதில் சட்டபூர்வமாக யாருக்கெல்லாம் உதவி அளிக்கவேண்டுமோ அதன் பிரகாரம் உதவி அளிக்கப்பட்டது. மற்றவர்கள் அரசாங்கத்திற்கு மனு செய்துகொள்ளவில்லை. அதனால் உதவி கொடுக்கவேண்டுமென்ற எண்ணமும்' அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை.

SRI M. KALYANASUNDARAM : மற்றவர்களின் குடும்பங்கள் மனு செய்துகொண்டால் அவைகள் கவனிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி இப்போது சொல்ல முடியாது. மனு செய்துகொண்டால் அதைப்பரிசீலித்துப் பார்த்து சொல்லலாம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், சில அரசியல் கட்சிகளின் கிளர்ச்சிகளின் காரணமாக இவ்விதம் துப்பாக்கி பிரயோகங்கள் நடைபெறுகின்றன. இவ்விதம் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த பிறகு அதில் இறந்துபோனவர்களுக்கு நஷ்ட ஈடு வேண்டுமென்று கேட்டு அதற்காக அரசாங்கப் பணத்தை எடுத்துக் கொடுத்து துர்விநியோகம் செய்யப்படுகிறது என்று பொதுமக்கள் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்விதம் அரசாங்கத்திற்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் வேண்டுமானால் அவ்விதம் எண்ணிக்கொள்ளலாம். இவ்விதம் நஷ்ட ஈடு கொடுப்பதை துர்விநியோகம் செய்வதாக சொல்ல முடியாது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் இதில் இறந்து போனவர் இதில் சம்பந்தப்பட்டவர் அல்ல. வெளியே நின்று சும்மா பார்த்துக்கொண்டிருந்தவர்தான். அதன் காரணமாகத்தான் அவருடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் நினைத்து கொடுக்க முன் வந்தது.